*செய்தி வெளியீடு*

*செ.வெ.எண்.*11 *நாள்:06.11.2017*

**நீலகிரி மாவட்டம் தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில் இன்று (*06.11.2017)* பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடர்பாக அனைத்து அரசுத்துறை அலுவலர்களுடனான ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

நீலகிரி மாவட்டம் உதகையில் டிசம்பர் மாதம் 07.12.2017 அன்று பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடுவது தொடர்பாக அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில் இன்று 06.11.2017 மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அனைத்துத் துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகளின் விவரங்கள் குறித்தும், நலத்திட்ட உதவிகள் வழங்குவது தொடர்பாகவும் அனைத்துத்துறை அரசு அலுவலர்களுக்கு ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கி விழா சிறப்பாக நடைபெற அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்பாணிப்பாளர் திரு.முரளிரம்பா,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.தெ.பாஸ்கரபாண்டியன் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.